## திராவிட மாடலுக்குத் தடம் போட்டுத் தந்த

# பனகல் அரசர் புகழ் ஓங்கட்டும்!

### எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பதிவு!

சென்னை, ஜூலை 11 –

சமூக நீதியை உறுதி செய்ய பாடுபட்ட நீதிக்கட்சி தலைவர்களில் ஒருவரான பனகல் அரசரின் புகழ் ஓங்கட்டும் என்று கழக இளைஞரணி செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் பதிவிட்டுள்ளார்.

அவரது பதிவு வருமாறு

**திராவிட இயக்கத்தின் தாய்மடியாம் நீதிக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான பனகல் அரசரின் பிறந்த நாள் இன்று.**

**பனகல் அரசர் குறித்த புத்தகம்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு அரசியல் அரிச்சுவடி.**

**சமூகநீதியை உறுதி செய்ய #CommunalGO ஆலய வழிபாட்டு உரிமையைக் காக்கின்ற வகையில் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புச் சட்டம், பெண்களுக்கு வாக்குரிமை, மருத்துவம் படிக்க சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்ற தடையைத் தகர்த்தது என பனகல் அரசர் சாதித்தவை ஏராளம்.**



**திராவிட மாடலுக்குத் தடம் போட்டுத் தந்த பனகல் அரசரின் புகழ் ஓங்கட்டும்!**

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

## மாநில உரிமைகள் பறிபோகும்! துணைவேந்தர் தேடல் குழுவில்

# பல்கலைக்கழக மானியக் குழு நியமன உறுப்பினரை நியமிப்பது கவலைக்குரியது!

### பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

*சென்னை, ஜூலை 11 -*

*மனிதநேய மக்கள் கட்சி தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*தமிழக அரசுப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர் நியமனத்திற்கான தேடல் குழுவில் பல்கலைக்கழக மானியக் குழு நியமன உறுப்பினரை சேர்க்கும் முடிவு கவலையை ஏற்படுத்தியுள்ளது.*

*உயர்கல்வித் தரத்தை மேம்படுத்துவது அவசியம் என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அதன் பெயரில் மாநில அரசுப் பல்கலைக்கழகங்களின் சுயாட்சி மற்றும் மாநிலங்களின் அரசியலமைப்புச் சார்ந்த*



*உரிமைகள் பாதிக்கப்படக் கூடாது.*

*இந்திய அரசியலமைப்பு கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் இயங்குகிறது. மாநில அரசுப் பல்கலைக்கழகங்களின் நிர்வாகத்தில் மாநில அரசின் பங்கு குறைக்கப்படும் வகையிலான எந்த நடவடிக்கையும் கூட்டாட்சியின் மாண்புகளுக்கு எதிரானதாகும்.*

*உயர்கல்வி நிறுவனங்கள் அரசியல் மற்றும் அதிகார மோதல்களின் களமாக அல்லாமல், அறிவியல் சிந்தனை, ஆராய்ச்சி மற்றும் கல்விச் சிறப்பை வளர்க்கும் சுயாட்சியான கல்வி மையங்களாகத் திகழ வேண்டும்.*

*துணைவேந்தர் நியமன நடைமுறை முழுமையாக வெளிப்படைத்தன்மை, தகுதி, கல்விசார் அனுபவம் மற்றும் நேர்மையின் அடிப்படையில் அமைய வேண்டும்.*

*எந்த ஒரு தரப்பிற்கும் அளவுக்கு மீறிய ஆதிக்கத்தை வழங்கும் நடைமுறைகள் உயர்கல்வியின் தரத்திற்கும், பல்கலைக்கழகங்களின் சுயாட்சிக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.*

*எனவே, தமிழக அரசு மாநிலங்களின் உரிமைகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் தன்னாட்சியை உறுதியாகப் பாதுகாக்கும் வகையில் அனைத்து தரப்பினருடனும் கலந்தாலோசித்து செயல்பட வேண்டும்.*

*உயர்கல்வியின் எதிர்காலம் அரசியல் அதிகாரப் போட்டியில் அல்ல; கல்விசார் சுதந்திரம், திறமை மற்றும் கூட்டாட்சிக் கொள்கையை மதிக்கும் அணுகுமுறையில்தான் பாதுகாக்கப்படும்.*

*இவ்வாறு மனிதநேய மக்கள் கட்சி தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.*

## மேகமலை புலிகள் காப்பக நில ஆக்கிரமிப்பு விவகாரம்; உச்சநீதிமன்றத்தில்

# த.வெ.க. அரசு மேல்முறையீட்டு சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும்!

### மலைக் கிராம விவசாயிகளுடனான ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்! கம்பம் ராமகிருஷ்ணன் தலைமை! மகாராஜன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*தேனி, ஜூலை 11-*

*திருவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகத்திற்கு உட்பட்ட வருசநாடு வனப்பகுதிகளில் அதிக அளவில் நில ஆக்கிரமிப்புகள் நடைபெறுவதாகவும், மலைச்சரிவுகளில் மரங்களை வெட்டி ஏலக்காய், இலவம் பஞ்சு பயிரிடுவதாகவும் புகார் எழுந்துள்ளது.*

*வைகை ஆற்றின் முக்கிய நீர்பிடிப்பு பகுதியான திருவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகத்தில் சட்டவிரோத ஆக்கிரமிப்புகள் அதிகரித்து வருவதாக தெரிவித்த உச்சநீதிமன்றம், 6 மாதங்களில் துணை ராணுவ படை உதவியுடன் ஆக்கிரமிப்புகளை அகற்ற அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.*

*இதனால் 3 தலைமுறைகளாக மலைப்பகுதிகளில் விவசாயம் செய்து வரும் லட்சக்கணக்கான விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.*

**தேனி தெற்கு தி.மு.க. ஆலோசனை!**

*இப்பிரச்சினை குறித்து தேனி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மயிலாடும்பாறை தி.மு.க. கட்சி*



*அலுவலகத்தில் மலை கிராம விவசாயிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.*

*கூட்டத்திற்கு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார்.*

*ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் கலந்து கொண்டார்.*

*நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானம் வருமாறு: -*

*100 ஆண்டுகளுக்கும் மேலாக இப்பகுதியில் பாரம்பரியமாக விவசாயம் செய்து வரும் சுமார் 2 லட்சம் மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில், தற்போதைய த.வெ.க அரசு போதிய ஆதாரங்களுடன் உடனடியாக உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு சீராய்வு மனுவை தாக்கல் செய்ய வேண்டும்.*

*முதலமைச்சர் ஜோசப் விஜய் இதில் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*மேலும், இது தொடர்பாக சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு முதலமைச்சருக்கு எழுதிய கடிதத்திற்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை எனவும், மக்களின் வாழ்வாதாரத்தை காக்க அரசு விரைந்து செயல்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.*

*இக்கூட்டத்தில் கடமலைமயிலை தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் வக்கீல் சுப்பிரமணி, வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் தங்கப்பாண்டி, மாவட்ட விவசாய அணி ஜெயபால், மாநில பொதுக்குழு உறுப்பினர் சேரன், முன்னாள் ஒன்றியக் கவுன்சிலர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.*

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னெடுத்த திராவிட மாடல் ஆட்சியால்

# பள்ளிக் கல்வியில் தொடர்ந்து முன்னணி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது!

### ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகம் அறிவிப்பை சுட்டிக்காட்டி, முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெருமிதம்!

சென்னை, ஜூலை 11-

ஒன்றிய கல்வி அமைச்சகத்தால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள UDISE+ 2025-2026 அறிக்கை, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் செயல்பட்ட 'திராவிட மாடல்' அரசால் பள்ளிக்கல்வியில் நிகழ்ந்துள்ள முன்னேற்றங்களை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

கல்விக்கான ஒவ்வொரு திட்டங்களை எந்தளவுக்கு பார்த்துப் பார்த்துச் செய்தாரோ, அதனால் ஏற்பட்டுள்ள பலன்களை புள்ளிவிவரங்களோடு இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள ஆட்சியாளர்கள் திராவிட மாடல் அரசு செயல்படுத்திய திட்டங்களின் பெயர்களை மாற்றுவதில் கவனம் செலுத்தாமல், தரமான கல்வி அனைவருக்கும் சென்றுசேர திராவிட மாடல் அரசின் தடத்தை பின்பற்றினாலே போதுமானது என்று பள்ளிக் கல்வித் துறை முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட UDISE+ 2025-26 (Unified District Information System for Education Plus) அறிக்கையில், பள்ளிக் கல்வியின் பல்வேறு முக்கியக் குறியீடுகளில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணி மாநிலமாகத் திகழ்வது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாணவர் சேர்க்கை, இடை நிற்றல் குறைவு, ஆசிரியர் எண்ணிக்கை, கல்வி உள்கட்டமைப்பின் பயனுள்ள பயன்பாடு மற்றும் பத்தாம் வகுப்பிற்குப் பிந்தைய



கல்வித் தொடர்ச்சி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தமிழ்நாடு தேசிய அளவில் சிறப்பான முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது.

**கல்வி உள்கட்டமைப்பு வசதி!**

UDISE+ 2025-26 அறிக்கையின்படி தமிழ்நாட்டில் 57,566 பள்ளிகள், 1,24,02,872 மாணவர்கள் மற்றும் 5,69,909 ஆசிரியர்கள் உள்ளனர். மாநிலத்தின் மாணவர்-ஆசிரியர் விகிதம் (PTR) 22:1 ஆக இருந்து, தேசிய சராசரியான 24:1-ஐ விட சிறப்பாக உள்ளது. மேலும், ஒரு பள்ளிக்கு சராசரியாக 215 மாணவர்கள் மற்றும் 10 ஆசிரியர்கள் இருப்பது கல்வி உள்கட்டமைப்பு திறமையாகப் பயன்படுத்தப்பட்டு வருவதை எடுத்துக்காட்டுகிறது.

மாணவர் இடை நிற்றல் விகிதத்தில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க சாதனையைப் படைத்துள்ளது. தொடக்க நிலை மற்றும் நடு நிலைப்பள்ளிகள் இடை நிற்றல் 0.0 சதவீதமாக பதிவாகியுள்ளது. இடைநிலைக் கல்வியில் இடை நிற்றல் விகிதம் 6.2 சதவீதம் மட்டுமே ஆகும். இது தேசிய சராசரியான 9.5 சதவீதத்தை விடக் குறிப்பிடத்தக்க அளவில் குறைவாகும்.

மொத்த சேர்க்கை விகிதத்திலும் (Gross Enrolment Ratio - GER) தமிழ்நாடு தேசிய அளவில் முன்னணியில் உள்ளது. தொடக்கநிலையில் 92.2, நடு நிலைப்பள்ளிகள் 95.2, இடைநிலையில் 97.4, மேல்நிலையில் 85.1 எனப் பதிவாகியுள்ளது. குறிப்பாக இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியில் தேசிய சராசரியை விட மிகவும் உயர்ந்த சேர்க்கை விகிதத்தை தமிழ்நாடு பெற்றுள்ளது.

பத்தாம் வகுப்பிற்குப் பிந்தைய கல்வித் தொடர்ச்சியிலும் மாநிலம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேல்நிலைக் கல்வியில் மாநிலத்தின் GER 85.1 ஆக உள்ளது. இதனுடன், 2025-26 கல்வியாண்டில் 83,600 மாணவர்கள் பாலிடெக்னிக் கல்வியிலும், 60,355 மாணவர்கள் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் (ITI) சேர்ந்துள்ளனர். மொத்தமாக 1,43,955 மாணவர்கள் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விப் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இது மாணவர்களின் திறன், விருப்பம் மற்றும் வேலைவாய்ப்பு நோக்கங்களை கருத்தில் கொண்டு பல்வேறு கல்விப் பாதைகளை தமிழ்நாடு வெற்றிகரமாக உருவாக்கியிருப்பதை வெளிப்படுத்துகிறது.

**தமிழ்நாட்டில் ஒரு பள்ளிக்கு சராசரி 215 மாணவர்கள்!**

கல்வி உள்கட்டமைப்பின் பயன்பாட்டிலும் தமிழ்நாடு சிறப்பாகத் திகழ்கிறது. தேசிய அளவில் ஒரு பள்ளிக்கு சராசரியாக 169 மாணவர்கள் உள்ள நிலையில், தமிழ்நாட்டில் ஒரு பள்ளிக்கு 215 மாணவர்கள் உள்ளனர். இது பள்ளிக் கல்வி வளங்கள் பயனுள்ள முறையில் பயன்படுத்தப்படுவதையும், கல்வி நிறுவனங்கள் கல்வியியல் ரீதியாக வலுவாக செயல்படுவதையும் காட்டுகிறது.

மேலும், தமிழ்நாட்டில் பள்ளிகளின் கட்டமைப்பும் சமநிலையுடன் அமைந்துள்ளது. மாநிலத்தில் உள்ள பள்ளிகளில் 59.05 சதவீதம் தொடக்கப் பள்ளிகள், 15.87 சதவீதம் நடு நிலைப்பள்ளிகள், 9.42 சதவீதம் உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 15.66 சதவீதம் மேல்நிலைப் பள்ளிகள் ஆக உள்ளன. இந்த சமநிலையான அமைப்பு மாணவர்கள் இடையூறு இன்றி அடுத்தடுத்த கல்வி நிலைகளுக்கு முன்னேற உதவுகிறது.

UDISE+ 2025-26 அறிக்கை, பள்ளிக் கல்வியில் தமிழ்நாடு தொடர்ந்து தேசிய அளவில் முன்னோடி மாநிலமாகத் திகழ்வதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. பள்ளி இடை நிற்றல் குறைத்தல், மாணவர் சேர்க்கையை உயர்த்தல், போதுமான ஆசிரியர் எண்ணிக்கை உறுதி செய்தல், கல்வி உள்கட்டமைப்பை திறமையாகப் பயன்படுத்துதல் மற்றும் பத்தாம் வகுப்பிற்குப் பிந்தைய பல்வேறு கல்வி வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றில் மாநிலம் சிறப்பான சாதனைகளைப் பதிவு செய்துள்ளது.

**மாணவர்களின் முழுமையான வளர்ச்சி!**

மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு தரமான கல்வி, டிஜிட்டல் கல்வி உள்கட்டமைப்பு, உள்ளடக்கிய கல்வி (Inclusive Education), தொழில்நுட்பத் திறன் மேம்பாடு மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கேற்ற கற்றல் சூழலை உருவாக்கும் பணிகளில் தமிழ்நாடு அரசு தொடர்ந்து முன்னெடுத்து வரும் முயற்சிகளுக்கு UDISE+ 2025-26 அறிக்கை வலுவான அங்கீகாரமாக அமைந்துள்ளது.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கையில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

## துணைவேந்தர்கள் தேடல் குழுவின்

# உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதைக் கைவிடுக!

### தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. வலியுறுத்தல்!

**சென்னை, ஜூலை 11 - "துணைவேந்தர்கள் தேடல் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஐந்தாக உயர்த்துவதை கைவிட வேண்டும்" என்று தென் சென்னை நாடாளுமன்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.**

*இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-*

*மரியாதைக்குரிய கழகத் தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான, திராவிட மாடல் ஆட்சியின் போது, நெடிய சட்டப் போராட்டம் நடத்தி, தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களின் வேந்தர்களாக முதலமைச்சர் தான் இருக்க வேண்டும் என, உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பைப் பெற்றோம்.*

*அந்தச் சட்டத்தின் செல்லுபடியாக்கம் தொடர்பான வழக்கு தற்போது சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கும் நிலையில், துணைவேந்தர்கள் தேடல் குழுவில், பல்கலைக்கழக மானியக் குழுவின் (UGC University Grants Commission) பிரதிநிதியை சேர்க்கும் நோக்கில், உறுப்பினர்களின் எண்ணிக்கையை 3இல் இருந்து 5 ஆக உயர்த்துவது குறித்து பேசுவதும், அதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு உயர்கல்வித்துறை முன்னெடுப்பதும் ஏற்றுக்*



*கொள்ள முடியாதது.*

*உயர் நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்புக்காக காத்திருக்காமல், ஆளுநரின் விருப்பத்திற்கு ஏற்ப புதிய ஏற்பாடுகளை முன்வைப்பது தமிழ்நாடு அரசின் சட்டநிலையையும், உயர் நீதிமன்றத்தில் அரசு முன்வைத்துள்ள வாதங்களையும் பலவீனப்படுத்தும்.*

*துணைவேந்தர்கள் தேடல் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஐந்தாக உயர்த்தும் முயற்சியை உடனடியாக கைவிட்டு, உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கைத் திறம்பட நடத்தி, பல்கலைக்கழக துணைவேந்தர்கள் நியமனத்தில், திராவிட மாடல் ஆட்சியில், உச்சநீதிமன்றத்தில் நாம் பெற்ற வெற்றியை, தமிழ்நாடு அரசின் மாநில அரசுகளின் உரிமையை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென, முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

*இவ்வாறு தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கூறியுள்ளார்.*



பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியாவை, சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் துணைத் தூதர் திருமதி மரியானா எல். நெய்சுலர் (Mrs. Mariana L. Neisuler) அவர்கள் நேற்று முன்தினம் (09.07.2026) மரியாதை நிமித்தமாக ரிப்பன் கட்டட அலுவலகத்தில் சந்தித்தார்.